**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 227 / 2024**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW4 |
| | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Suresh kumar |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 1st day of June, 2026.

**(A1, A3 are present. A2 absent, Petition filed and allowed)**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நேரம் 12.38 மணி

நான் சென்னை போரூரில் வசித்து வருகிறேன். நான் Electronics பொருட்கள் சர்வீஸ் செய்யும் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. காவல் நிலையத்திலிருந்து SI எனக்கு போன்

செய்து TV சேதமடைந்தது அதை சர்வீஸ் செய்ய எவ்வளவு ஆகும் என்று கேட்டார். என்னிடம் காட்டப்படும் பில் நான் வழங்கியது அல்ல. அதில் காணப்படும் கையொப்பம் என்னுடைய கையொப்பம் அல்ல.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 2024 ஆம் ஆண்டு கமலானந்தன் என்பவர் என்னிடம் வந்து அவர் அய்யப்பன்தாங்களில் குடியிருந்ததாகவும் அவர் வாடகைதாரர் கோபிநாதன் மற்றும் அவரது நண்பர்கள் இருவரும் சேர்ந்து வாடகை வீட்டை காலி செய்ய வேண்டும் என்று பிரச்சனை செய்து வீட்டிலிருந்த பொருட்களை தூக்கி போட்டதாகவும், சாம்சங் M51 செல்போன், HP Laptop, 43 inch LED TV சரிசெய்து தர 03-05-2024 அன்று என்னிடம் கொடுத்தார்கள் என்றும், பின்னர் மேற்படி பொருட்களை நான் ஆய்வு செய்து சாம்சங் M51 செல்போன் மற்றும் அதன் உதிரிபாகங்கள் ஆகியவற்றிற்கு சேதமதிப்பாக ரூபாய் 1,350/- எனவும் லேப்டாப் மற்றும் அதன் உதிரிபாகங்கள் ஆகியவற்றிற்கு சேதமதிப்பாக ரூபாய் 16,500/- எனவும், LED TV Display Panel சேதமதிப்பாக ரூபாய் 9,000/- மொத்த சேத மதிப்பாக ரூபாய் 26,850/- என சேதமதிப்பு வழங்கி அது குறித்து போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.